வ.மா.பொ.சே.ஆ.குழு சுற்றறிக்கை இல. : 31/2026

எனது இல : **NP/07/10/04/100**
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்,
யாழ்ப்பாணம்.
*2026.09.24*

அமைச்சின் செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,

திணைக்களத் தலைவர்கள்,
வடக்கு மாகாணம்.

<u>வடக்கு மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பதவியின் தரம் I லிருந்து விசேட தரத்திற்கான சேவை மூப்பு மற்றும் திறமை அடிப்படையிலான பதவியுயர்வு (2024) 2026</u>

2013.06.01ம் திகதி முதல் செயல்வலுப்பெறும் வண்ணம் வடமாகாண கௌரவ ஆளுநரால் அனுமதிக்கப்பட்ட மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் சேவைப்பிரமாணக் குறிப்பிற்கமைய, வடக்கு மாகாண தொழில்நுட்பசேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்(சிவில்) பதவியின் விசேட தரத்திற்கு "சேவைமூப்பு மற்றும் திறமை" அடிப்படையில் பதவியுயர்த்துவதற்காக வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

குறித்த பதவியின் செயல்வலுவிலுள்ள சேவைப்பிரமாணக் குறிப்பிற்கு அமைய இச்சுற்றறிக்கையில் விதந்துரைக்கப்பட்ட சகல தகைமைகளையுடைய வடக்கு மாகாண தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) தரம்- I பதவியைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும். இவ்விண்ணப்பம் கோரலின் மூலம் வடக்கு மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்(சிவில்) பதவியின் விசேடதரப் பதவியில் **2024.12.31ம் திகதியில்** உள்ளவாறான ஆளணி வெற்றிடங்களின் அறுபது சதவீதமானவை (60%) சேவைமூப்பு மற்றும் திறமையடிப்படையில் நிரப்பப்படும். (தகைமையடைந்திருந்து 2024.12.31ம் திகதியிற்கு பின்னர் ஓய்வு பெற்றவர்கள் உட்பட) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி **<u>2026.10.16</u>**ஆகும்.

02. **பதவியுயர்விற்கான சேவை நிபந்தனைகள் :-**

02.1. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். செயல்வலுவிலுள்ள சேவைப்பிரமாணக் குறிப்பிற்கு / ஆட்சேர்ப்புத் திட்ட விதிகளுக்கு அமைவான நிபந்தனைகள் ஏற்புடையதாகும்.

02.2. இவ்வறிவித்தலுக்கமைய தகைமையுடைய விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்காக வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப்பரீட்சைச் சபையினால் நடாத்தப்படும் கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்டு வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

02.3. இச்சுற்றறிக்கை மூலம் வேண்டப்படும் தேவைப்பாடுகளை 2024.12.31ம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

02.4. பிரதிப் பிரதம செயலாளர் - நிர்வாகம், வடக்கு மாகாணம் அவர்களின் NP/02/04/SLTS/Gen இலக்க, 2026.09.01ம் திகதிய கடிதத்திற்கமைய,

2024.12.31இல் உள்ளவாறான மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை **ஆறு (06)** ஆகும். இவ் விண்ணப்பம் கோரலின் மூலம் அதில் **நான்கு (04)** வெற்றிடங்கள் (அறுபது சதவீதமானவை (60%)) சேவைமூப்பு மற்றும் திறமை அடிப்படையில் நிரப்பப்படும்.

02.5. இந்நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும்.

**03. சம்பள அளவுத்திட்டம் :-**

விசேடதர நியமனத் திகதியில் நடைமுறையில் இருந்த சம்பள சுற்றுநிருபத்திற்கு ஏற்ப சம்பளப்படி நிலை தீர்மானிக்கப்படும்.

**04. பதவியுயர்விற்கு விண்ணப்பிப்பதற்காக பூரணப்படுத்தப்பட வேண்டிய தகைமைகள் :-**

**4.1 வயதெல்லை :-**

இப் பதவியுயர்விற்கு குறைந்த மற்றும் உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**4.2. தகைமைகள் :**

4.2.1. மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவை வகுதியின் (MN-03-2016) **தரம் I** இல் குறைந்தது **ஆறு (06)** வருடங்கள் செயலூாக்கமிக்கதும், திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருப்பதுடன் உரிய **ஆறு (06)** சம்பள ஏற்றத்தினையும் உழைத்துப் பெற்றிருத்தல் வேண்டும்.

4.2.2. தரமுயர்வு வழங்கும் தினத்துக்கு உடன் முந்திய **ஐந்து (05)** வருட காலத்தில் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

4.2.3. அனுமதியளிக்கப்பட்ட செயலாற்றுகை தரங்கணிப்பு செயன்முறைக்கு இணங்க தரமுயர்வு வழங்கும் தினத்துக்கு முன்னரான **ஆறு (06)** வருட காலத்தில் திருப்திகரமான மட்டத்திலான அல்லது அதனைவிட உயர்ந்த மட்டத்திலான செயலாற்றுகையை பெற்றிருத்தல் வேண்டும்.

4.2.4. உரிய காலப்பகுதிக்குள் **மூன்றாம் (3ம்)** வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

4.2.5. அரச நிர்வாக சுற்றறிக்கை 30/2019 ற்கமையவும், வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் உள்வாங்கப்பட்ட அரச சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை 1/2020 ஏற்பாடுகளுக்கு அமையவும் ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பில் கவனம் செலுத்தல் வேண்டும்.

**05. பொதுவான தகைமை :-**

விண்ணப்பதாரிகள் மேலே குறிப்பிட்ட பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு தேவையான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**06. பதவியுயர்வு முறை :-**

6.1. வடக்கு மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் அனுமதிக்கப்பட்ட சேவைப்பிரமாணக் குறிப்பு, அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகள்,

தாபனவிதிக்கோவை, வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை ஆகியவற்றின் ஏற்பாடுகள் என்பன இப்பதவியுயர்வு தொடர்பில் கவனத்தில் கொள்ளப்படும்.

6.2. சேவைப்பிரமாணக் குறிப்பிற்கமைவாக, விளம்பரத்தின் **பந்தி 10இல்** குறிப்பிட்டபடி கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன் இவ்வறிவித்தலில் கோரப்பட்ட அவர்களது தகைமைகள் யாவும் பரீசிலிக்கப்படும். உரிய தகைமைகள் தேவைப்படுத்தப்பட்ட திகதியில் முழுமையாக / முறையாக இல்லையென தெரியவருமிடத்து, எதுவித அறிவித்தலுமின்றி விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

6.3. தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) விசேட தரத்திற்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி எண்ணிக்கையில் 2024.12.31ம் திகதியில் உள்ளவாறான மொத்த வெற்றிடங்களின் அறுபது சதவீதமான (60% - **04 ஆளணிகள்**) சேவைமூப்பு மற்றும் திறமை அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்தப் புள்ளிகளின் உயர் ஒழுங்கு (Merit Order) அடிப்படையில் நிரப்பப்படும்.

6.4. **இவ்விளம்பரத்தில் கோரப்பட்ட அனைத்து தகைமைகளையும் விண்ணப்பதாரர்கள் 2024.12.31ம் திகதி அல்லது அதற்கு முன்னராக பூரணப்படுத்தியிருத்தல் கட்டாயமானதாகும் என்பதுடன் தகைமையற்றவர்களின் விண்ணப்பங்கள் அறிவித்தலேதுமின்றி நிராகரிக்கப்படும்.**

6.5. விண்ணப்பப் படிவங்களை சிபார்சு செய்யும் திணைக்களத் தலைவர், விண்ணப்பதாரி சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளதற்கு அமைவாக சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்பதில் திருப்தியடைந்து முன்னளிப்பு செய்யப்பட வேண்டும்.

6.6. குறித்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரியின் விண்ணப்பத்தினை சிபார்சு செய்யும் திணைக்களத் தலைவர் / நியமன அதிகாரி தொழில்நுட்ப உத்தியோகத்தர்(சிவில்) விசேடதர ஆட்சேர்ப்புத் திட்ட நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்ட பதவி உயர்வுக்கான தகைமைகளை நிரூபிக்கத் தேவையான **மூல ஆவணங்களைத்** தயார்படுத்தி வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன், தேவையான ஆவணங்களின் தயார்படுத்தலில் ஏற்படும் கால தாமதங்களுக்கு வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு பொறுப்பேற்கமாட்டாது.

6.7. தனது தகைமைகளை உறுதிப்படுத்துகின்ற சகல ஆவணங்களையும் நேர்முகத்தேர்வின் போது சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு நேர்முகத்தேர்வின் போது சமர்ப்பிக்காத ஆவணங்கள் தொடர்பில் பின்னர் எக்காரணம் கொண்டும் கவனம் செலுத்தப்படமாட்டாது.

6.8. **விண்ணப்பப் படிவங்களை சிபார்சு செய்யும் திணைக்களத் தலைவர், விண்ணப்பதாரி சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைவாக சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளாரென (வட மாகாண மா.பொ.சே.ஆ. 22/2021ம் இலக்க சுற்றறிக்கையின்பால் தங்களது கவனம் ஈர்க்கப்படுகிறது) இவ்விடயத்தில் திருப்தியடைந்து முன்னளிப்பு செய்யப்பட வேண்டும்.**

07. விண்ணப்பிக்கும் முறை :-

07.1. இவ்வறிவித்தலுடன் வெளியிடப்படும் விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து, பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

07.2. உரிய விண்ணப்பப்படிவ வடிவில் அமையாதவையும், சரியாகப் பூரணப்படுத்தப்படாதவையும், முழுமையுறாதவையுமான விண்ணப்பங்கள் எதுவித அறிவிப்புக்களுமின்றி நிராகரிக்கப்படும். உரியவாறு விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யத் தவறுவதால் ஏற்படும் விளைவுகளுக்கு விண்ணப்பதாரர்களே பொறுப்பாளிகளாவர். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பூர்த்தி செய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம் இந்த அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக உள்ளமை தொடர்பில் விண்ணப்பதாரியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறில்லாதவிடத்து விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

07.3. மேலே குறிப்பிடப்பட்ட தரமுயர்விற்கு விண்ணப்பிப்பவர்கள் தங்களது விண்ணப்பப் படிவங்களை தமது திணைக்களத் தலைவரூடாக **(தற்போது ஓய்வுபெற்று, விண்ணப்பிக்க தகைமையுடையவர்கள், தாம் ஓய்வுபெறும்போது பணியாற்றிய திணைக்களத்தின் தலைவரூடாகவும்)** சமர்ப்பித்தல் வேண்டும். திணைக்களத் தலைவரினால் சிபார்சு செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

07.4. விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **வடக்கு மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பதவியின் தரம் I லிருந்து விசேட தரத்திற்கான சேவை மூப்பு மற்றும் திறமை அடிப்படையிலான பதவியுயர்வு (2024) 2026** என குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

07.5. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் **2026 ஒக்ரோபர் மாதம் 16** ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் திணைக்களத் தலைவர் மூலம் (ஓய்வுபெற்றவர்கள் கடைசியாக பணியாற்றிய திணைக்களத்தலைவரூடாக) தமது அமைச்சு செயலாளர் ஊடாக **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்."** எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

## 08. பொய்யான தகவல்களுக்கான தண்டனை :-

விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்யும் போது மிக கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். இக்கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சை விதிகளின்படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சைக்கு முன்னரோ, கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையின் போதோ அல்லது கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகைமையற்றவர் என தெரியவருமாயின், அவரின் பரீட்சார்த்தியுரிமை அச்சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யப்படும் என்பதுடன் சமர்ப்பிக்கின்ற ஏதேனும் தகவல் பொய்யானதென தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண அரசசேவையிலிருந்து நீக்கப்படலாம்.

## 09. ஆள் அடையாளத்தை நிரூபித்தல்

விண்ணப்பதாரியின் ஆளடையாளத்தை நிரூபிப்பதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

(அ). தேசிய அடையாள அட்டை

(ஆ). செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (பாஸ்போட்)

(இ). செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

10. கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சை :-

கட்டமைப்புச்சார் நேர்முகப்பரீட்சையின் போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் பொருட்டு புள்ளிகள் வழங்கப்படும். (மொத்தம் 100 புள்ளிகள்)

| இல | புள்ளிகள் வழங்கப்படும் விடயப் பரப்புக்கள் | உச்ச புள்ளிகள் |
|---|---|---|
| 01 | சேவை அனுபவம்<br>உரிய அடிப்படைத் தகைமைகளுக்கு அப்பால் பூர்த்தி செய்துள்ள செயலூக்கமிக்கதும் திருப்திகரமான சேவைக் காலம். | 50 புள்ளிகள் |
| 02 | திறமை<br>மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் உரிய சந்தர்ப்பத்தில் அனுமதியளிக்கப்படுகின்ற புள்ளி வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் திறமை தீர்மானிக்கப்படும். | 45 புள்ளிகள் |
| 03 | நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை | 05 புள்ளிகள் |
| மொத்தம் | | 100 புள்ளிகள் |

11. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்ட அல்லது குறிப்பிடப்படாத விடயங்களில் கருதப்படுகின்ற அல்லது கருதப்படாத ஏதேனும் தெளிவின்மை சம்பந்தமாக மாற்றங்களை மேற்கொள்வது தொடர்பில் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும். அதே போன்று ஏதேனும் விசேட காரணங்களின் நிமித்தமாக குறித்த கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையை நடாத்த முடியாமல் போகும் பட்சத்தில் அது சம்பந்தமாக வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும்.

12. இப்பதவிக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படும்போது, அவ்வெற்றிடத்தின் ஒரு பகுதியையோ அல்லது முழுமையாகவோ நிரப்புவது சம்பந்தமான இறுதித் தீர்மானம் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் மேற்கொள்ளப்படும்.

13. இச்சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களினைத் தங்கள் அமைச்சின் / திணைக்களங்களின் / அலுவலகங்களின் கீழ்க் கடமையாற்றும் தொடர்புடைய அலுவலர்களுக்குத் தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

14. மேலும், இத்தகவல்களை வடக்கு மாகாண இணையத்தளமான www.np.gov.lk எனும் முகவரியில் **Exams & Recruitments** ⟶ **Advertisement** ஊடாக பெற்றுக் கொள்ள முடியும்.

குறிப்பு:-

*2024.12.31ம் திகதியிற்குப் பின்னர் சேவையாற்றி முறையாக ஓய்வு பெற்ற அலுவலர்கள் (ஒழுக்காற்றுக் கட்டளை அடிப்படையில் ஓய்வு பெற்றவர்கள் அல்லாதவர்கள்) இவ் பதவியுயர்விற்கு தகைமையுடையவர்களாக காணப்படுவார்களாயின் அவர்களது விண்ணப்பப் படிவங்களையும் முறைப்படி அறிவித்தல் வழங்கி அவ்வாறானவர்களால் கையளிக்கும் விண்ணப்பங்களை சிபார்சுடன் உறுதிப்படுத்தி அனுப்பி வைப்பதில் திணைக்களத் தலைவர்கள் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.*

ஆழ்வாப்பிள்ளை சிறி
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடக்கு மாகாணம்

ஆழ்வாப்பிள்ளை சிறி,
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
**2026.09.24**

பிரதி :- 1. பிரதம செயலாளர், வடக்கு மாகாணம். - தகவலுக்காக.
2. ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாணம். - தகவலுக்காக.